/மிக அவசரம்/

/மின்னஞ்சலில்/

தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை – 600 006

ந.க.எண். 24689 / அ4 / இ1 / 2019, நாள். .12.2022

பொருள்: தமிழ்நாடு – பள்ளிக்கல்வி – நிர்வாக சீரமைப்பு – அலுவலகங்கள்/பள்ளிகளுக்கு பணியிடங்கள் மாற்றம் மற்றும் பகிர்ந்தளித்தமை சார்ந்து – விவரங்கள் கோருதல் – சார்பு.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண். 125, பள்ளிக் கல்வித் (ப.க.4(1)) துறை, நாள். 16.12.2020.
2. அரசாணை (நிலை) எண். 151, பள்ளிக் கல்வித் (ப.க.1(1)) துறை, நாள். 09.09.2022.
3. தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரக இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.24689/அ4/இ1/2019 நாள்.04.08.2021, 12.08.2022, 14.10.2022, 20.10.2022 மற்றும் 16.11.2022.

******

பள்ளிக் கல்வித் துறையின்கீழ் இயங்கும் அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நிருவாகம்/அலுவலகம் தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக பார்வை 1,2–இல் காணும் அரசாணைகளின்படி பள்ளிக் கல்வித் துறையில் நிருவாக சீரமைப்பு காரணமாக புதிய அலுவலகங்கள் உருவாக்கப்பட்டும், சில அலுவலகங்களுக்கு தேவையுள்ள இடங்களுக்கு பணியிடங்கள் மாற்றியமைத்தும், பணியிடங்கள் நிர்ணயம் செய்து ஆணை வழங்கப்பட்டு, உரிய பணியிடங்கள் அலுவலகம் மற்றும் பள்ளிகளுக்கு பள்ளிக் கல்வி ஆணையரகத்தின் வழியாக ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம் (IFHRMS) மூலம் உள்ளீடு செய்யப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக 29.12.2022 அன்று பிற்பகல் பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளரின் தலைமையில், பள்ளிக் கல்வி ஆணையர், கருவூலக் கணக்குத் துறை ஆணையர், இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) மற்றும் பள்ளிக் கல்வி ஆணையரக நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர் ஆகியோருடன் நடைபெற்ற கூட்டத்தில், மேற்காண் பொருள் தொடர்பாக விவாதிக்கப்பட்டது. அதனடிப்படையில் கருவூலக் கணக்கு துறையால் வழங்கப்பட்ட ஊதியம் பெறாதோர் பட்டியல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்கள் இப்பொருள் சார்பாக தனிக்கவனம் செலுத்தி, தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து அலுவலகங்கள் /பள்ளிகள் சார்பாக IFHRMS–இல் உள்ளீடு செய்யப்பட்ட அனைத்து ஆசிரியர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கும் ஊதியம் பெறப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்யவும், ஊதியம் பெறப்படவில்லையெனில் அதன் விவரங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் 1 மற்றும் 3–லும், IFHRMS–இல் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் கணக்குத் தலைப்பு (Head of Account) தவறுதலாக

த.பி.பா

இருப்பின் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் 2-லும் பதவி வாரியாக தனித்தனியாக பூர்த்தி செய்தும், பார்வை 1-இல் காணும் அரசாணையின்படி புதியதாக அனுமதிக்கப்பட்ட 384 இளநிலை உதவியாளர் மற்றும் 95 பதிவறை எழுத்தர் பணியிடங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள விவரங்களையும் உறுதி செய்து உடன் இவ்வாணையரக ( பணியிடங்கள் வாரியாக தனித்தனியாக ) அ4 பிரிவு மின்னஞ்சல் முகவரிக்கு (cosea4sec@gmail.com) இன்று மாலை 5.00 மணிக்குள் அனுப்பி வைக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு - படிவம் 1, 2 மற்றும் 3

பள்ளிக் கல்வி இணை இயக்குநர்

30.12.2022

பெறுநர்
அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்
நகல். தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை.6
நகல். மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை.6
நகல் . மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர், சென்னை.6
— தகவலுக்காகப் பணிந்து அனுப்பப்படுகிறது

9D:\A ll Sections\A Section\A4 S1\24689 a4 s1 22.12.2022.doc